**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial

Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 245/2023 P.W.8/L.W.13**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. மோகன்ஜோஸ்லின் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 12.03.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது காவல்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். இதற்கு முன்பு குளச்சல் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது காவல்நிலையக்குற்ற எண். 119/2022 என்ற வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 19.04.2022 ம் தேதி 13.30 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சந்திரன், கண்ணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 7 மற்றும் பார்வை மகசர் அ.சா.ஆ.8 ஆகும்.** சாட்சிகளிடம் கையொப்பமும் பெற்றேன்.

2. பின்னர் சாட்சிகள் செந்தில்குமார், சசிகுமார், ரெத்தினராஜ், ராஜசேகர், ராஜகுமார், ரமேஷ் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பார்வை மகசர் சாட்சிகளான சந்திரன், கண்ணன் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன். பின்னர்நிலையம் வந்து வழக்குப் பதிவுச் செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் ஜார்ஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன். 05.01.2023 ம் தேதி 11.45 மணிக்கு நாகர்கோவில் மாவட்ட சிறைச்சாலையில் வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபரான ஷாபுமோன் என்பவரை சம்பிரதாய கைதுச் செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினேன்.

3. பின்னர் 20.0.2023 ம் தேதி 11.30 மணிக்கு குற்றம் சுமத்தப்பட்ட நபரான நூர்ஷகான் என்பவரை தக்கலை பெண்கள் கிளைச்சிறைசாலையில் வைத்து சம்பிரதாய கைதுச் செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினேன். இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 457, 380 பிரிவுகளிலிருந்து 457, 380, 414 இ.த.ச ஆக பிரிவு மாற்றம் செய்து சட்ட மாறுதல் அறிக்கையுடன் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் வழக்கினை மேல்விசாரணைக்காக உதவி ஆய்வாளர் தேவராஜ் என்பவரிடம் ஒப்படைத்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u> :

1. புகார் மனுவை நான் பெறவில்லை. சிறப்பு உதவி ஆய்வாளர் தான் பெற்றார். நான் அந்த புகார் மனுவின் தன்மைப்படி தான் சம்பவயிடம் சென்றேன் என்றால் சரிதான். சம்பவயிடத்தில் எத்தனை சாமி சிலைகள் இருந்தது என்றால் அம்மன்சிலை ஒன்று இருந்தது. அந்த சிலையில் ஏற்கனவே நகை இருந்ததா என்பதை நான் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். புகார்தாரரிடம் விசாரித்தேன். புகார்தாரர் பூஜை முடித்துவிட்டு 04.20 மணிக்கு பார்த்தபோது 20 வயது மதிக்க தக்க ஒரு நபர் இருந்ததாக தான் சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

2. அவர் ஒரு நபர் போவதைப் பார்த்து சத்தம் போட்டதாகசொல்லியுள்ளார் என்றால் சரிதான். அதன் பிறகு புகார்தாரர் எங்கு சென்றார் என்றால் வீட்டிற்குச் சென்றுவிட்டார். மேற்படி சங்கதியை புகார்தாரர் என்னிடம் தெரிவித்தார். காவல்நிலையத்திற்கும் சம்பவயிடத்திற்கும் இடையே 3 பர்லாங் தூரம் இருக்கும். புகார்தாரர் 19.04.2024 ம் தேதி 12.30 மணிக்கு புகார் கொடுத்தார். மீண்டும் அவர் 07.00 மணிக்கு செல்லும்போது தான் காணாமல் போன விவரம் தெரிய வந்தது. 07.00 மணியிலிருந்து 12.30 மணி வரை புகார்தாரர் என்ன செய்துக்கொண்டிருந்தார் என்றால் கமிட்டியில் அனைவரிடமும் பேசிக்கொண்டிருந்ததாக சொன்னார்.

3. கோவில், கோவிலை சுற்றியுள்ள இடங்களில் கேமரா உள்ளது. அதனை நான் ஆய்வு செய்தேனா என்றால் - ஆம் ஆய்வு செய்தேன். அதில் தெரிந்த 20 வயது நபர் நன்கு தெரிகிறாரா என்றால் அடையாளம் தெரியவில்லை. ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் நான் கைதுச்செய்தேன். புகார் மனுவில் 12 கிராம் எடையுள்ள கல் நெக்லஸ் காணாமல் போனதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மொத்தம் 6 பவுன் காணாமல் போனதாக புகாரில் சொல்லப்பட்டுள்ளது. அதை 3 பவுனாக அறிக்கையில் மாற்றம் செய்தது நான் தான்.

4. நான் 6 பவுனை 3 பவுனாக மாற்றியதற்கு என்ன காரணம் என்றால் ஒப்புதல் வாக்குமூலத்தில் 3 பவுன் என்று தான் சொல்லியுள்ளார். அதனால் தான் மாற்றினேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள நேரத்தின்படி ஏன் நான் சட்டப்பிரிவில் நேரத்தை மாற்றவில்லை என்றால் நடந்த நேரத்தை தான் சொல்லியுள்ளேன். சம்பவ நேரம் அதிகாலை 12.30 மணியா? அல்லது 04.20 மணியா? என்றால் எனக்குத் தெரியவில்லை. புகார்தாரர் 3 பவுன் நகையை பெற்றுச் சென்றபிறகு மீதம் உள்ள 3 பவுன்நகையை கேட்டார்களா என்றால் கேட்டார்கள். ரெக்கவரி ஆகவில்லை.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.